

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (22.05.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ரவிகுமார் திங்ரா சந்தித்துப் பேசினார். உடன் தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (22.5.2023) தலைமைச் செயலகத்தில், பதிவுத்துறையில் சந்தை வழிகாட்டி மதிப்பு சீரமைப்புக் குழுவின் முதல் அடுக்கு உயர் மட்டக் குழுவின் தலைவர் முனைவர். தேவ ஜோதி ஜெகராஜன் அவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



சேலம் மாவட்டம், ஏற்காட்டில் 46–வது கோடை விழா மலர்க்கண்காட்சியினை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் 21.05.2023 அன்று திறந்து வைத்து, பார்வையிட்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.பார்த்திபன், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் இயக்குநர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) சீ.பாலச்சந்தர் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு

# தனது சொந்த நிதியிலிருந்து ரூ.5 இலட்சத்துக்கான காசோலை!

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, மே 24 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.05.2023) தலைமைச் செயலகத்தில், "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை"க்கு தனது சொந்த நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலையினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில்

பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு தமிழ்நாட்டை விளையாட்டின் தலைநகராக மாற்ற வேண்டும் என்ற லட்சியத்தோடு, மாநிலத்தில் அதிநவீன விளையாட்டு உட்கட்டமைப்பு மற்றும் விளையாட்டு வசதிகளை ஏற்படுத்தவும், விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் விளையாட்டு சூழலை உருவாக்கிடவும், அரசிற்கும், பங்குதாரர்களுக்கும் இடையில் தடையற்ற ஒருங்கிணைப்பை அடைவதற்கும், பெருநிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நன்கொடையாளர்களிடமிருந்து பெறக்கூடிய நன்மைகளைப் பயன்படுத்துவதற்கும், "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை" (*Tamil Nadu Champions Foundation*) என்ற அறக்கட்டளை உருவாக்கப் பட்டு முதலமைச்சர் அவர்களால் 8.5.2023 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் உருவாக்கம், உறுப்பினர்கள் மற்றும் இயக்குநர் குழுவின் செயல்பாடுகள் ஆகியவை தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த அறக்கட்டளை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களை துணைத் தலைவராகவும் கொண்ட ஏழு பேர் அடங்கிய நிர்வாகக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாக நடைமுறைகளை சிறப்பாக செயல்படுத்துவதற்கு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு தனது சொந்த நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலையினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலாளர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மிதிவண்டி வீராங்கனை

# செல்வி ஷா.தபித்தாவுக்கு நவீன மிதிவண்டி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, மே 24 -

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.05.2023) சென்னை தலைமைச்செயலகத்தில், கோவை மாவட்டத்தைச் சேர்ந்த மிதிவண்டி வீராங்கனை (*Cycling*) செல்வி ஷா.தபித்தாவுக்கு போட்டிகளுக்கென்று பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட ரூபாய் 13.99 லட்சம் மதிப்பிலான மிதிவண்டியை வழங்கினார்.

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 10ஆம் வகுப்பு பயின்று வரும் செல்வி ஷா.தபித்தா சைக்கிளிங் வீராங்கனை ஆவார். இவர் 2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ம் தேதி முதல் 15ம் தேதி வரை அசாம் மாநிலத்தில் கவுகாத்தியில் நடைபெற்ற 14 வயதிற்குட்பட்டோருக்கான தேசிய அளவிலான சைக்கிளிங் போட்டியில் (*Track*) வெள்ளிப்பதக்கம் பெற்றுள்ளார். ஜனவரி 2023ம் வருடம் மகாராஷ்ட்ரா மாநிலம், நாசிக்கில் 07.01.2023 முதல் 10.01.2023 வரை நடைபெற்ற 27வது தேசிய அளவிலான மிக இளையோர் (மகளிர்) சைக்கிளிங் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்றுள்ளார்.

தேசிய அளவில் நடைபெற்ற சைக்கிளிங் போட்டியில் வெற்றி பெற்று, தற்பொழுது *National Centre of Excellence* (NCOE) மூலமாக தேர்வு செய்யப்பட்டு பயிற்சி மேற்கொண்டு வரும், செல்வி ஷா.தபித்தா பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பங்கேற்று வெற்றிபெறுவதற்கு ஏதுவாக போட்டிகளுக்கென்று பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட மிதிவண்டி வழங்கினால் பல்வேறு சாதனைகளை படைத்து நமது மாநிலத்திற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்க்க முடியும் என இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை விடுத்தார்.

அவரது கோரிக்கையினை கனிவுடன் பரிசீலித்த இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மிதிவண்டி வழங்க நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இதனை தொடர்ந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் வீராங்கனை செல்வி ஷா.தபித்தா கேட்டுக் கொண்டபடி தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து ரூபாய் 13.99 லட்சம் மதிப்பீட்டிலான *Argon 18 PRO (Complete bike) - Competition Wheel Set, Mavic Front Five Spoke Wheel Set and Mavic Rear Disc Wheel set* மிதிவண்டியை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலாளர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பா.ஜ.க.வுக்கு எதிராக

# எதிர்க்கட்சிகளை ஒன்றிணைக்கும் நடவடிக்கை தீவிரம்!

## மல்லிகார்ஜுன கார்கே - ராகுல் காந்தியுடன் நிதிஷ்குமார் சந்திப்பு!

புதுடெல்லி, மே 24 -

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல்காந்தி ஆகியோரை பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார் சந்திக்கிறார்.

2024ம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சியில் பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார் ஈடுபட்டுள்ளார். இதற்காக அவர் நாடு முழுவதும் பயணம் மேற்கொண்டு எதிர்க்கட்சித் தலைவர்களை சந்தித்து வருகிறார். அந்த வகையில், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி ஆகியோரை, நிதிஷ்குமார் சந்தித்துப் பேசுகிறார்.

முன்னதாக கடந்த ஏப்ரல் 12ஆம் தேதி ராகுல், கார்கேவுடன் நிதிஷ்குமார் ஆலோசனை நடத்தினார். அதன் பின்னர் மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி, அகிலேஷ் யாதவ், ஒடிசா முதலமைச்சர் நவீன் பட்நாயக், சரத் பவார், உத்தவ் தாக்கரே, டெல்லி முதலமைச்சர் அர்விந்த் கேஜ்ரிவால், சீதாராம் யெச்சூரி, டி.ராஜா, ஜார்க்கண்ட் முதலமைச்சர் ஹேமந்த் சோரன் உள்ளிட்டோரை நிதீஷ்குமார் சந்தித்து பேசினார்.

இந்நிலையில், கார்கே, ராகுல்காந்தி ஆகியோரை, நிதிஷ்குமார் மீண்டும் சந்திக்கிறார். அடுத்து வரவுள்ள 5 மாநில தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் குறித்து இந்த சந்திப்பின் போது ஆலோசனை நடத்தப்பட உள்ளது.

### புதுக்கோட்டைக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வருகை!

# புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை!

புதுக்கோட்டை, மே 24 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி - புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு: -





கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அமைச்சராக பொறுப்பேற்று முதன் முதலாக புதுக்கோட்டை மாவட்டத்திற்கு நாளை (25.5.2023 - வியாழக்கிழமை) பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற் காக வருகை தர உள்ளார்கள்.

புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கீழ்க்கண்டவாறு சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

அதன் விவரம் வருமாறு: -

அதில் திருமயம் தொகுதி மதியம் 12.15 மணி சவேரியார்புரம், 1.50 மணி புதுக்கோட்டை நகர எல்லையில் வரவேற்பு,

மாலை 6.15 மணி திருவரங்குளம் வரவேற்பும் அளிக்கப் படுகிறது.

இந்நிகழ்வுகளில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், நகராட்சி தலைவர்கள், துணைத் தலைவர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் , துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூட்டாக தமது அறிக்கையில் கூறி உள்ளனர்.

### கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் எம்.பி. கோரிக்கையை ஏற்று

# நாமக்கல் புறவழிச்சாலையில் ரெயில்வே மேம்பாலம்!

## தென்னக ரயில்வே அனுமதி!

நாமக்கல், மே 24 -

நாமக்கல் மாவட்டம் களங்காணி இரயில்வே நிலையத்திலிருந்து நாமக்கல் இரயில்வே நிலையம் வரை உள்ள இரயில் பாதையில் இடைப்பட்ட மரூர்பட்டி கிராமம் வழியாக நாமக்கல் புறவழிச்சாலை அமைய உள்ளது. இப்புறவழிச்சாலை செல்லும் வழியில் அங்கு உள்ள இரயில் பாதையை கடக்க மேம்பாலம் அமைக்கப்படவேண்டும்.

இம்மேம்பாலத்தை அமைப்பதற்கு மாநில நெடுஞ்சாலைத் துறைக்கும் தென்னக இரயில்வே துறைக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் பெற வேண்டி உள்ளது. இதுநாள் வரை இதற்கான ஒப்புதலை தென்னக இரயில்வே வழங்கவில்லை.

இந்நிலையில் தற்பொழுது நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், எம்.பி., 23.02.2023 அன்று அனுப்பிய கடிதத்தின் கோரிக்கையை ஏற்று நாமக்கல் புறவழிச்சாலை திட்டத்தில் வரும் இரயில்வே பாதையில் மேம்பாலம் அமைக்க மாநில நெடுஞ்சாலைத் துறைக்கும்,தென்னக இரயில்வே துறைக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு உள்ளது. இதன் மூலம் மேம்பாலம் அமைக்க தேவையான திட்ட மதிப்பீடு தென்னக இரயில்வே தயாரித்து அதற்கான மதிப்பீட்டு தொகையை தமிழ்நாடு அரசின் நெடுஞ்சாலைத் துறையிடம் பெற்று மேம்பாலம் கட்டுமான பணியை தென்னக இரயில்வே மேற்கொள்ளும்.



இந்தியா சார்பில் அஸ்ஸாம் மாநிலத்தில் நடந்த 2வது சர்வதேச மல்லர்கம்பம் விளையாட்டு போட்டியில் விழுப்புரம் நகரம் 13 வது வார்டு நந்தனார் தெருவைச் சேர்ந்த தமிழக நட்சத்திர மல்லர்கம்ப விளையாட்டு வீரர் மாமல்லன் மூ.ஹேமசந்திரன் தனது அபார திறமையால் தங்கம் வென்று முத்திரை பதித்ததையொட்டி உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடியை நேரில் சந்தித்து வாழ்த்துக்களைப் பெற்றார். இளைஞர் அணி அமைப்பாளர் செ.மணிகண்டன் உடனிருந்தார்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சர்வதேச ஸ்குவாஷ் போட்டி 2023க்கான பனியனை (TSHIRT) நேற்று முன்தினம் (22.05.2023) அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் பொது மேலாளர் (நிர்வாகம்) வே.மணிகண்டன், அரசு அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு ஸ்குவாஷ் இராக்கெட் அசோசியேசன் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.